21.11.2017

தினமலர்

# முட்டை விலை, 'கிடுகிடு' உயர்வு : 25 காசு குறைத்தே கொள்முதல்

நாமக்கல்முட்டை விலை :, 516 காசுகளாக உயர்ந்துள்ள நிலையில், 25 காசுகள் மைனஸ் விலைக்கு, வியாபாரிகள் கொள்முதல் செய்ய, தேசிய முட்டை ஒருங்கிணைப்புக்குழு எனும், 'நெக்' அமைப்பு பச்சைக்கொடி காட்டியுள்ளது. சேலம், நாமக்கல், மாவட்டங்களில், 1,000 பண்ணைகளில் உள்ள, ஐந்து கோடி கோழிகள் மூலம், தினமும், 3.50 கோடி முட்டைகள் உற்பத்தி செய்யப்படுகின்றன. தேசிய முட்டை ஒருங்கிணைப்புக் குழு நெக் -, நிர்ணயிக்கும் விலைக்கே, வியாபாரிகள் முட்டை கொள் முதல் செய்ய வேண்டும்.
கடந்த, 1ம் தேதி, 420 காசுகளாக நிர்ணயம் செய்யப்பட்ட முட்டை கொள்முதல் விலை, படிப்படியாக உயர்ந்து, 16ம் தேதி, 516 காசுகளாக நிர்ணயம் செய்யப்பட்டது. வரலாற்றில் உச்சபட்ச விலை என்பதால், பண்ணையாளர்கள் மகிழ்ச்சி அடைந்தனர் . ஆயினும், வியாபாரிகள், பண்ணையாளர்களிடம், 25 காசுகள் மைனஸ் விலைக்கே, முட்டை கொள்முதல் செய்கின்றனர்.

பண்ணையாளர்கள் சிலர் கூறியதாவது :'நெக்' நிர்ணயம் செய்யும் விலைக்கே, வெளி மாவட்டத்துக்கு முட்டை விற்பனை செய்ய முடியாதுஅவ்வாறு செய்தால் ., வியாபாரிகளுக்கு எவ்வித பயனும் இல்லைஅதனால் ., நெக், கொள்முதல் விலையில் இருந்து, மைனஸ், 25 காசுக்கு விற்பனை செய்ய பரிந்துரை செய்கிறதுஇந்த விலை ., லாரி ஏற்று, இறக்கு கூலி, வண்டி வாடகை, டிரைவர் படி, டீசல் செலவு என்பதை கருத்தில் கொண்டு, மைனஸ், 25 காசுகள் குறைத்து கொள்முதல் செய்கின்றனர் . தற்போது, ஒரு முட்டை உற்பத்தி செய்ய, 340 முதல், 350 காசுகள் வரை செலவாகிறது . இதில், பெரிய அளவுக்கு பாதிப்பு இருக்காது என்பதால், பண்ணையாளர்களும், மைனஸ் விலைக்கே முட்டையை விற்பனை செய்கின்றனர்.
இவ்வாறு அவர்கள் கூறினர்.

## தென் மாவட்டங்களில் இன்று மிதமான மழை

தமிழகத்தில், வடகிழக்கு பருவமழை, ஒரு வாரமாக வலுவிழந்து காணப்படுகிறது . அதேநேரத்தில், கேரளாவின் தென் மாவட்டங்களில், பருவமழை தீவிரமாக உள்ளது. எனவே, தமிழகத்தின் தென் மாவட்டங்களிலும், இன்று மிதமான மழை பெய்யலாம் என, வானிலை மையம் கணித்துள்ளதுநேற்று காலை ., 8:30 மணியுடன் முடிவடைந்த, 24 மணி நேரத்தில், தமிழகத்தில் அதிகபட்சமாக, திருநெல்வேலி மாவட்டம், பாபநாசத்தில், 9 செ.மீ., மழை பெய்துள்ளதுஅதனால் ., மேற்கு தொடர்ச்சி மலைப்பகுதி அணைகளில் நீர்மட்டம் உயர்ந்துள்ளதுஇதற்கிடையில் ., 'வங்கக் கடலில், அந்தமானுக்கு வடக்கே, புதிய காற்றழுத்த தாழ்வு பகுதி உருவாகியுள்ளது . 'அது, நீண்ட துாரத்தில் உள்ளதால், தமிழகத்துக்கு மழை தர தற்போது வாய்ப்பில்லை' என, வானிலை ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர்.

- நமது நிருபர் –

## வைகை அணை இன்று திறப்பு

சென்னைமதுரை மாவட்டம் :, மேலுார் மற்றும் திருமங்கலம் பகுதியில், மழை இல்லாததால், நிலத்தடி நீர் வறண்டு காணப்படுகிறது பொதுமக்கள் குடிநீரின்றி . அவதிப்படுகின்றனர்; கால்நடைகளும் குடிநீரின்றி சிரமப்படுகின்றனஎனவே ., வைகை அணையிலிருந்து, தண்ணீர் திறந்து விட வேண்டும் என, பொதுமக்கள் மற்றும் விவசாயிகள், அரசுக்கு கோரிக்கை விடுத்தனர்அதை ஏற்று ., வைகை அணையிலிருந்து, இன்று முதல் ஏழு நாட்களுக்கு, திருமங்கலம் பிரதான கால்வாய் வாயிலாக, 200 கன அடி; பெரியாறு பிரதான கால்வாய் வாயிலாக, 700 கன அடி தண்ணீர் திறந்து விட, முதல்வர் பழனிசாமி உத்தரவிட்டுள்ளார்.

தினமணி

## சில இடங்களில் மழைக்கு வாய்ப்பு



வெப்பச் சலனம் காரணமாக, தமிழகத்தின் ஒரு சில இடங்களில் அடுத்த 24 மணி நேரத்தில் இடியுடன் கூடிய மழை பெய்ய வாய்ப்பு உள்ளதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

குறைந்த காற்றழுத்தத் தாழ்வுப் பகுதி: வடக்கு அந்தமானில் குறைந்த காற்றழுத்தத் தாழ்வுப் பகுதி வலுப்பெறுவதில் தாமதம் ஏற்பட்டுள்ளது. அந்தப் பகுதியில் கடல் வெப்பம் குறைந்து காணப்படுகிறது. இதுதவிர, வளிமண்டலத்தின் கீழ் அடுக்கில் காற்று வலுக்குறைந்துள்ளது. இதன் காரணமாக, தமிழகத்தில் தற்போது கன மழைக்கு வாய்ப்பு குறைந்து காணப்படுகிறது.

பாபநாசத்தில் 90 மி.மீ.: தமிழகம் மற்றும் புதுச்சேரியில் திங்கள்கிழமை காலை 8.30 மணிவரை, திருநெல்வேலி மாவட்டம் பாபநாசத்தில் 90 மி.மீ. பதிவாகியுள்ளது. திருநெல்வேலி மாவட்டம், ஆயக்குடி, செங்கோட்டை, தென்காசி, தூத்துக்குடி மாவட்டம், விளாத்திகுளம், கன்னியாகுமரி மாவட்டம் தக்கலை, நாகப்பட்டினம் மாவட்டம் தரங்கம்பாடி, கடலூர் மாவட்டம் நெய்வேலி ஆகிய இடங்களில் தலா 30 மி.மீ. மழை பதிவாகியுள்ளது.

## பாபநாசம், சேர்வலாறு அணைகளில் 175 மி.மீ. மழை

நெல்லை மாவட்டத்தில் பாபநாசம், சேர்வலாறு, மணிமுத்தாறு அணைகளில் 175 மி.மீ., மழை பதிவாகியுள்ளது. இதையடுத்து அணைகளுக்கு நீர்வரத்து அதிகரித்துள்ளது.

வடகிழக்குப் பருவமழை தொடங்கி 2 வாரம் பெய்த நிலையில், கடந்த சில தினங்களாக மழை பெய்யவில்லை. இந்த நிலையில், மேற்குத் தொடர்ச்சி மலையில் நீர்ப்பிடிப்புப் பகுதிகளில் ஞாயிற்றுக்கிழமை பலத்த மழை பெய்தது. திங்கள்கிழமை காலை 8 மணியுடன் முடிவடைந்த 24 மணி நேரத்தில் பதிவான மழை (மில்லி மீட்டர்): பாபநாசம் அணை (அதிகபட்சம்)-88, பாபநாசம் கீழ் அணை-43, சேர்வலாறு அணை-36, மணிமுத்தாறு அணை-8, கடனாநதி அணை-3, ராமநதி அணை- 38, கருப்பாநதி அணை-28, குண்டாறு அணை-23, அடவிநயினார் அணை-7, நம்பியாறு அணை-2, கன்னடியன் அணைக்கட்டு-19.6, சேரன்மகாதேவி-6, அம்பாசமுத்திரம்-5.4, ஆலங்குளம்-9.2, ஆய்க்குடி-34.8, சிவகிரி-15, சங்கரன்கோவில்-9.1.

கடந்த சில தினங்களாக மழை இல்லாததால் அணைகளுக்கு நீர்வரத்து குறைந்து காணப்பட்டது. இதனிடையே, நீர்ப்பிடிப்புப் பகுதியில் மீண்டும் மழை பெய்து வருவதால் அணைகளுக்கு நீர்வரத்து அதிகரித்துள்ளது. பாபநாசம் அணைக்கு விநாடிக்கு 800 கனஅடி, மணிமுத்தாறு அணைக்கு 86 கனஅடி, கடனாநதி அணைக்கு 103 கனஅடி, அடவிநயினார் அணைக்கு 50 கனஅடியாக நீர்வரத்து இருந்தது.

நீர்மட்டம்(அடிகளில்) : பாபநாசம் அணை-97.50, சேர்வலாறு அணை- 94.22, மணிமுத்தாறு அணை-81.95 , கடனாநதி அணை-75, ராமநதி அணை-62.75, கருப்பாநதி அணை -65.29 , குண்டாறு அணை-35.88 , அடவிநயினார் அணை-90.25, வடக்குப்பச்சையாறு அணை-25.50, நம்பியாறு அணை-21.92, கொடுமுடியாறு அணை-42.75.

## மேட்டூர் அணையில் இன்று முதல் தண்ணீர் திறப்பு

மேட்டூர் அணையின் கிழக்கு, மேற்கு கால்வாய் பாசனத்துக்கு வெள்ளிக்கிழமை முதல் 13 நாள்களுக்கு தண்ணீர் திறக்கப்படுகிறது.

மேட்டூர் அணையில் இருந்து கால்வாய் பாசனத்துக்காக 64 -ஆவது ஆண்டாக வெள்ளிக்கிழமை தண்ணீர் திறக்கப்படுகிறது. பாசனத்துக்கான கால்வாய் மதகுகளை காலை 9.30 மணியளவில் தமிழக அமைச்சர்கள் கருப்பணன், பி.தங்கமணி ஆகியோர்

திறந்து வைக்கின்றனர். இந்தப் பாசனத்தின் வாயிலாக சேலம், நாமக்கல், ஈரோடு மாவட்டங்களில் 45 ஆயிரம் ஏக்கர் நிலம் பாசன வசதி பெறுகிறது.

ஆண்டுதோறும் ஆகஸ்ட் 1 -ஆம் தேதி முதல் டிசம்பர் 15 -ஆம் தேதி வரை 137 நாள்களுக்கு கால்வாய் பாசனத்துக்குத் தண்ணீர் திறப்பது வழக்கம். இதற்கு 9.6 டி.எம்.சி. தண்ணீர் தேவைப்படும். பாசனப் பகுதிகளில் மழை பெய்தால், பாசனத் தேவை குறையும்.

இந்த நிலையில், கடந்த ஆகஸ்ட் 1 -ஆம் தேதி அணையின் நீர் இருப்பு திருப்திகரமாக இல்லாத காரணத்தால், கால்வாய் பாசனத்துக்கு தண்ணீர் திறக்கப்படவில்லை.

## பாசனத்துக்கு நீர் திறக்க முதல்வர் உத்தரவு

அணைகள், நீர்த்தேக்கங்களில் இருந்து பாசனத்துக்காக தண்ணீர் திறந்து விட முதல்வர் எடப்பாடி கே.பழனிசாமி உத்தரவிட்டுள்ளார்.

இதுகுறித்து, அவர் வியாழக்கிழமை வெளியிட்ட உத்தரவு:

திருநெல்வேலி மாவட்டம் நம்பியாறு நீர்த்தேக்கத்தில் இருந்து வெள்ளிக்கிழமை (நவ. 17) முதல் தண்ணீர் திறந்து விடப்படும். இதனால், 1744.55 ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெறும்.

திண்டுக்கல் மாவட்டம் பாலாறு பொருந்தலாறு அணையில் இருந்து பழைய ஆயக்கட்டுப் பகுதிகளுக்கு பாசனத்துக்காக சனிக்கிழமை ( நவ. 18) முதல் நீர் திறந்து விடப்படும். இதனால், 6 ஆயிரத்து 168 ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெறும்.

பழனி வட்டம் வரதமாநதி அணையில் இருந்து ஆயக்குடி பாப்பன் வாய்க்கால், பெரிய வாய்க்கால் மற்றும் பழனி வாய்க்கால்களில் சனிக்கிழமை (நவ.18) நீர் திறந்து விடப்படும். இதனால், திண்டுக்கல் மாவட்டத்தில் உள்ள 1,545 ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெறும்.

தினகரன்

## முட்டை விலை ஒரே நாளில் 11 காசுகள் குறைவு

நாமக்கல் முட்டை கொள்முதல் விலை ஒரே நாளில் :11 காசுகள் குறைந்து ரூ.5.05 ஆக நிர்ணயிக்கப்பட்டுள்ளது விலை உயர்வு காரணமாக விற்பனை குறைந்ததால் . .முட்டையின் விலை குறைக்கப்பட்டதாக தகவல் வெளியாகியுள்ளது

## குமரியில் மீண்டும் மழை : திற்பரப்பில்21 மி.மீ பதிவு




நாகர்கோவில்குமரி மாவட்டத்தில் வெயில் கொளுத்தி வந்த நிலையில் நேற்று : மீண்டும் பரவலாக மழை பெய்தது நேற்று காலை வரை அதிகபட்சமாக திற்பரப்பில் . 21 மி கோழிப்போர்விளையில் .மீ மழை பதிவாகி இருந்தது.5.2, குருந்தன்கோட்டில் 5, பேச்சிப்பாறையில் 9, சிற்றார்1ல் 3 மி.மீட்டரும் மழை பதிவாகி இருந்தது.

நேற்று காலை நிலவரப்படி பேச்சிப்பாறை அணை நீர்மட்டம் 30.10 அடியாக இருந்தது அணைக்கு .396 கன அடி தண்ணீர் வரத்து காணப்பட்டது .499 கன அடி தண்ணீர் திறந்துவிடப்பட்டிருந்தது பெருஞ்சாணி நீர்மட்டம் .60.05 அடியாக இருந்தது . அணைக்கு111 கன அடி தண்ணீர் வரத்து காணப்பட்டது .285 கன அடி தண்ணீர் திறந்துவிடப்பட்டிருந்ததுசிற்றார் .1ல் 11.58 அடியும், சிற்றார்2ல் 11.67 அடியும் நீர்மட்டம் காணப்படுகிறது.

## பாசனத்திற்காக வைகை அணையில் இருந்து நீர் திறப்பு

மதுரை மேலூர் ஒருபோக பாசனத்திற்காக வைகை அணையில் இருந்து :900 கனஅடி நீர் திறக்கப்பட்டுள்ளது மேலூர் விவசாயிகளின் போராட்டத்தையடுத்து முதல்வர் . காலை .உத்தரவின்படி வைகை அணையில் இருந்து நீர் திறக்கப்பட்டுள்ளது6 மணி முதல் வைகை அணையில் இருந்து கூடுதலாக 900 கனஅடி நீர் திறக்கப்பட்டுள்ளது.

## வைகை அணையில் இருந்து வினாடிக்கு900 கன அடி நீர் திறப்பு




மதுரை  வைகை அணையில் இருந்து வினாடிக்கு :900 கன அடி  நீர் திறக்கப்பட்டுள்ளது மதுரை மாவட்டம் வேலூரில் விவசாயிகள் போராட்டம் . .நடத்தியதன் விளைவாக நீர் திறக்கப்பட்டுள்ளது